சுருக்கம்

கல்லூரிக் கல்வி – அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி – 2022-23ஆம் கல்வியாண்டில் திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறையில் புதியதாக தொடங்கப்பட்டுள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு நிரந்தர கட்டடம் கட்டுதல் – ரூ.14,94,80,000/-க்கு நிருவாக அனுமதி மற்றும் நிதி ஒப்பளிப்பு செய்து – ஆணை வெளியிடப்படுகிறது.

---

உயர்கல்வித் (டி1) துறை

அரசாணை(நிலை)எண் 216

நாள்:14.10.2022
சுபகிருது வருடம், புரட்டாசி – 27
திருவள்ளுவர்ஆண்டு 2053

படிக்கப்பட்டவை:

1. திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் மாவட்ட நடுவரின் செயல்முறைகள் ந.க. எண் ஆ3/11560/2018, நாள் 29.06.2022.
2. அரசாணை (நிலை) எண் 178, உயர்கல்வி (ஜி1)த் துறை, நாள் 07.09.2022.
3. கல்லூரிக் கல்வி இயக்குநரின் கடிதம் ந.க.எண் 35489/ஜெ3/2022, நாள் 07.09.2022.

-----

**ஆணை:**

மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் அவர்களால் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 11.04.2022 அன்று நடைபெற்ற உயர்கல்வித் துறையின் மானியக் கோரிக்கையின் போது அறிவிக்கப்பட்ட அறிவிப்பிற்கிணங்க, மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், ஏனைய இடங்களுடன் 2022-23ஆம் கல்வியாண்டில் திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறையில் புதியதாக அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஐந்து பாடப்பிரிவுகளுடன் துவங்க அனுமதி அளித்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் கல்லூரிக் கல்வி இயக்குநர், திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை வட்டம், பண்ணப்பட்டி மேல்பாகம் கிராமம் புல எண்.651/1, மொத்த பரப்பு 99.63.00 ஹெக்டேர், அரசு தீர்வை ஏற்படாத தரிசு-குன்று என வகைபாடு செய்யப்பட்டுள்ள நிலத்திலிருந்து 4.06.00 ஹெக்டேர் நிலத்தினை மேற்படி தொடங்கப்பட்ட புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு கட்டடம் அமைக்க நிபந்தனைகளுடன் முன்நுழைவு அனுமதி வழங்கி மேலே முதலாவதாக படிக்கப்பட்ட திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் மாவட்ட நடுவரின் செயல்முறைகளில் ஆணையிடப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

3. மேலும், கல்லூரிக் கல்வி இயக்குநர் தனது கடிதத்தில் திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு நிரந்தரக் கட்டடம் கட்டுவது தொடர்பாக தொழில்நுட்பக் கல்வி வட்ட பொதுப்பணித்துறையின் தலைமைப் பொறியாளரிடமிருந்து ரூ.15,15,00,000/-மதிப்பீட்டிலான திட்டமதிப்பீடு மற்றும் வரைபடம் பெறப்பட்டுள்ளது என தெரிவித்து, அத்திட்டமதிப்பீட்டின்படி அக்கல்லூரிக்கு புதியதாக நிரந்தர கட்டடம் கட்டுவதற்கு ரூ.15,15,00,000/-க்கு நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒப்பளிப்பு 2022-2023ஆம் நிதியாண்டிலேயே வழங்கி ஆணையிடுமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. கல்லூரிக் கல்வி இயக்குநரின் கருத்துருவினை கவனமுடன் ஆய்வு செய்த அரசு, திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறையில் புதியதாக தொடங்கப்பட்டுள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் மாவட்ட நடுவரால் முன்நுழைவு அனுமதி வழங்கப்பட்டுள்ள திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை வட்டம், பண்ணைப்பட்டி மேல்பாகம் கிராமம் புல எண்.651/1-ல் உள்ள மொத்தம் 99.63.00 ஹெக்டேர் பரப்பிலிருந்து 4.06.00 ஹெக்டேர் பரப்பு கொண்ட அரசு தீர்வை ஏற்படாத தரிசு-குன்று என வகைபாடு செய்யப்பட்டுள்ள நிலத்தில் நிரந்தர கட்டடம் கட்டுவதற்கு ரூ.14,94,80,000/-க்கு (ரூபாய் பதினான்கு கோடியே தொண்ணூற்று நான்கு இலட்சத்து எண்பதாயிரம் மட்டும்) (ஆண்டு விலை உயர்வு தொகை ரூ.20,00,000/-மற்றும் தொழிலாளர் நல நிதியில் குறைக்கப்பட்ட தொகை ரூ.20,000/- நீங்கலாக) நிருவாக அனுமதி அளித்தும், அச்செலவினத்தை 2022-23ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்டமதிப்பீட்டிலிருந்து மேற்கொள்ள கல்லூரிக் கல்வி இயக்குநருக்கு அனுமதி அளித்தும் ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி 4-ல் ஒப்பளிக்கப்பட்ட தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின்கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

"4202 - கல்வி, போட்டி விளையாட்டு, கலை, பண்பாடு குறித்த மூலதனச் செலவு – 01 பொதுக்கல்வி – 203 பல்கலைக் கழக கல்வியும், உயர்கல்வியும் – மாநிலச் செலவினங்கள் –JB கட்டடங்கள் – தொழில்நுட்பக்கல்வி பிரிவால் நிருவகிக்கப்படுபவை – 416 பெரும்பணிகள்–01 பெரும்பணிகள்.
(IFHRMS த.தொ.கு. 4202 - 01- 203 - JB - 41601)"

6. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.எண். 43297/ கல்வி-I/2022, நாள் 07.10.2022-ல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

தா. கார்த்திகேயன்
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
கல்லூரிக் கல்வி இயக்குநர், சென்னை-15.
தலைமை பொறியாளர், பொதுப்பணித்துறை, தொழில்நுட்பக் கல்வி வட்டம், சென்னை -25.

சம்பந்தப்பட்ட கல்லூரிக் கல்வி இணை இயக்குநர்
(கல்லூரிக் கல்வி இயக்குநர் வழியாக).
முதல்வர், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, மணப்பாறை,
திருச்சிராப்பள்ளி மாவட்டம். (கல்லூரிக் கல்வி இயக்குநர் வழியாக).
மாநிலக் கணக்காயர், சென்னை–18.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–35.
சம்பந்தப்பட்ட கருவூல கணக்கு அலுவலர்கள்.
உள்ளுறை கணக்கு அலுவலர், முதன்மை மாநில கணக்காயர் அலுவலகம்,
சென்னை–9.
நகல்
முதன்மைச் செயலாளர் அவர்களின் தனிச்செயலர், உயர்கல்வித்துறை,
சென்னை–9.
நிதித்(கல்வி–I)துறை, சென்னை –9.
இ.கோ/உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது//

14/10/22
பிரிவு அலுவலர்
14/10/22